**மீள்குடியேற்ற அதிகாரசபை 2010**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை மீள்குடியேற்ற அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர மீள்குடியேற்ற அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் 6.5.3 ஆம் பிரிவுகள் | i. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த வரைபு அறிக்கையின் ஓர் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>ii. 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள்குடியேற்ற அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| i. I ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவு | வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் குடிபெயர்ந்த மக்களை மீள அப்பிரதேசங்களில் குடியமர்த்தி தேவைப்பாட்டை பூர்த்திசெய்வதற்காக அப் பிரதேசங்களின் கிளைக் காரியாலயங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ii. III ஆம் அத்தியாயத்தின் 20(1) ஆம் பிரிவு | அதிகாரசபைக்கு அதன் வசமே ஓர் நிதியம் இருக்க வேண்டிய போதிலும் அத்தகைய நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் விளைவு ரூபா 40,025 ஆன மிகையை ஏற்படுத்தியிருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,045 ஆனமையால் விளைவுகளில் ரூபா 51,070 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. அதிகாரசபையின் பல்வேறு பெறுவனவுகள் மற்றும் நிர்வாகக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 3.9 மில்லியனாலும் ரூபா 3.6 மில்லியனாலும் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 2.2.1 முகாமைத்து திறமையீனங்கள்

-------------------------------------------

2007 இன் 09 ஆம் இலக்க மீள்குடியேற்ற அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் பகுதி II இன் 13 ஆம் பிரிவின்படி, அதிகாரசபையின் நோக்கங்களாவன,

(i) உள்ளக இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் அகதிகளைப் பாதுகாப்பு மற்றும் மரியாதைக்குரிய வழிகளில் மீள்குடியேற்றல் அல்லது மீளமைத்தலை உறுதிப்படுத்துதல், மற்றும்

(ii) உள்ளக இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் அகதிகளின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கு வசதியளிப்பதன் மூலம் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் அவர்களுக்கு உதவிபுரிவதற்கும் அந்நபர்களை மீள்குடியேற்றல் அல்லது புதிதாக குடியமர்த்தல் வசதிகளை ஏற்படுத்தல்

எவ்வாறாயினும், அதிகாரசபை ஆரம்பித்ததிலிருந்து மேற்குறித்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் அதிகாரசபை வெற்றியீட்டியிருக்கவில்லை. இவ்வாறே அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்களை எய்துவதற்காக (அ) முதல் (கி) வரை மேற்கொள்ளப்பட வேண்டிய 15 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் இது வரையில் எதுவித செயற்பாட்டையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் செயற்பட்டதாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர் சபை 09 அங்கத்தவர்களைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக 2010 செப்தெம்பர் 15 ஆம் திகதி மாத்திரம் பணிப்பாளர் சபைக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2008 ஆம் ஆண்டு முதல் ஒரு வருடத்திற்கு ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் படி நடாத்தப்பட்டிருந்தது. 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபைக் கூட்டம்

நடாத்தப்பட்டு மாதாந்த செயற்பாடு தொடர்பான ஓர் மதிப்பீடும் அந் நடவடிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபை ஆரம்பம் முதல் வருடாந்தப் பாதீட்டின் மூலம் மீண்டெழும் செலவினத்திற்காக மாத்திரம் ஏற்பாடுகளை வழங்கியிருந்ததுடன் அதிகாரசபையினால் மூலதனச் செலவினத்தை ஏற்பதற்காக அமைச்சினால் பண ஏற்பாடு கோரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 25 ஆனதுடன் இவர்களில் 20 பேர் ஆட்சேர்க்கப்பட்டு வேலைப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தின் ஆரம்பம் முதல் வெற்றிடங்களுக்கு 05 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு மீளாய்வாண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தினால் கூட்டுத்திட்டம் 2009 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இச் சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டதும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தின் ஓர் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) கடந்த 02 ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரசபையின் வலு, நலிவுகள், வெளித்தாக்கங்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் போதியளவில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நோக்கங்களும் குறிக்கோள்களும் உள்ளடக்கப்பட்டு இவை அதிகாரசபையில் செயற்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8 ஆம் அத்தியாயத்தின் 7.4.1 மற்றும் 7.4.2 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் 1% முதல் 135% ஆன கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் ஒட்டுமொத்தமாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) செயற்திறனும் மதிப்பீடும்

(ஆ) பாதீடு

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) பதவியணி முகாமைத்துவம்